IN THE COURT OF DISTRICT MUNSIF, KATPADI, VELLORE DISTRICT.
OS.No. 76/2020
Deposition of witness for PW1

| | | | |
|---|---|---|---|
| Name | : வேலு | Caste | : - |
| Father Name | : ஆறுமுகம் | Calling | : – |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 12th day of December, 2023.

1, 2 மற்றும் 7 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:

1. நான் 2–ம் பிரதிவாதி பழனி மற்றும் அவரது தந்தை கணபதி ஆகியோரிடம் இருந்து வா.சா.ஆ–1ன் படி வழக்கு சொத்தை கிரையம் பெற்றேன் என்றால் சரிதான். வா.சா.ஆ–1ல் சொத்து விவரத்தில் நாற்புற எல்லையில் தெற்கு பக்கத்தில் என்ன சர்வே எண் என்று குறிப்பிடமால் கோடிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். கிராம நத்தம் என்பதால் அதன் சர்வே எண் தெரியவில்லை.

2. வா.சா.ஆ–1–ல் சொத்து விவரத்தின் கடைசியில் நிலவுடைமை மேம்பாட்டு திட்டத்தின் கீழ் புதிய சர்வே எண் வழங்கப்பட்டுள்ளதாக குறிப்பிட்ட நிலையில் கிரையம் பெற்ற சொத்தின் தெற்கு பக்கத்தில் என்ன சர்வே எண் என்று பத்திரம் எழுதும்போது தெரியாது என்று நான் கூறுவது தவறு என்றால் சரியல்ல. எனவே வா.சா.ஆ–1 ஆனது ஒரு குறைபாடுடைய ஆவணம் என்றால் சரியல்ல. வா.சா.ஆ–1 தவறாக உள்ளது என்று அதனால் பிழைத்திருத்தல் ஆவணமுமோ அல்லது புதிய கிரைய ஆவணமோ செய்துக்கொடுக்க கோரி எனக்கு விற்றவர்கள் மீது நடவடிக்கை ஏதேனும் நான் எடுத்தேனா என்றால் இல்லை.

3. வா.சா.ஆ–1 எழுதம்படும் சமயத்தில் ராணுவத்திலிருந்து ஓய்வு பெற்று வழக்கு சொத்தில் உள்ள தொண்டான்துளசி கிராமத்தில் நான் வசித்து வந்தேன் என்றால் சரிதான். வழக்கு சொத்து உள்ள ஊரிலேயே நான் வசித்து வந்து வழக்கு சொத்தை கிரையம் பெற்றுள்ள போது எனக்கு விற்றவர்கள் தான் தவறுதலாக வா.சா.ஆ–1 யை எனக்கு நிறைவேற்றி கொடுத்துள்ளார்கள் என்று நான் கூறுவது தவறு என்றால் எனக்கு விற்றவர்கள் மீதுதான் தவறு உள்ளது. மேலே கூறிய

விவரங்களை எனது வழக்குரையில் கூறி வழக்குரை சொத்து விவரத்தில் வா.சா.ஆ–1ல் குறிப்பிடாத தெற்குப்பக்க சர்வே எண்ணை சரியாக குறிப்பிட்டுள்ளேனா என்றால் கிராம நத்தம் என்று குறிப்பிட்டுள்ளேன்.

4. தற்போது என்னிடம் காட்டப்படும் இவ்வழக்குரையின் சொத்து விவரத்தில் அவ்வாறு காட்டப்பட்டுள்ளதா என்று கேட்டதற்கு சாட்சி ஆவணத்தை நன்கு பார்வையிட்டு இல்லை என்று கூறுகிறார். வா.சா.ஆ–1 குறையுற்ற ஆவணம் என்றும், அதன் குறையை நிவர்த்தி செய்ய சட்ட நடவடிக்கை எதுவும் எடுக்காமல் வா.சா.ஆ–1ன் அடிப்படையில் போடப்பட்ட இவ்வழக்கு நிலைக்கதக்கதல்ல என்றால் இல்லை. வா.சா.ஆ–1ன் படிக்கு நான் கிரையம் பெற்ற சொத்தை கடந்த 07.03.2008 அன்று என் மனைவி ஜமுனாவிற்கு வழக்கு சொத்தின் ஒரு பகுதியினை செட்டில்மெண்ட் செய்துக்கொடுத்த பத்திரத்தின் சார்பதிவக சான்றிட்ட நகல் தான் தற்போது என்னிடம் காட்டப்படும் ஆவணம் என்றால் சரிதான். (மேற்படி தேதியில் பதிவு செய்யப்பட்ட செட்டில்மெண்ட் பத்திர எண்.2273/2008–ன் சார்பதிவக சான்றிட்ட நகல் பி.வா.சா.ஆ–1 ஆகும்.)

5. மேற்படி என் மனைவி மேற்படி செட்டில்மெண்ட் சொத்தை கன்னியப்பன் என்பவருக்கு கிரையம் செய்துக்கொடுத்துள்ளார் என்றால் சரிதான். மேற்படி விவரங்களை இவ்வழக்கில் நான் கூறவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ–2ல் என் பெயரிலும், என் மனைவி பெயரிலும் வழங்கபட்டுள்ளது என்றால் சரிதான். அதில் அதன் விஸ்தீரணம் 24.50 ஏர்ஸ் என்று குறிப்பிட்டுள்ளது என்றால் சரிதான். அதன்படி 60 செண்டுதான் வருகிறது என்றால் சரிதான். வா.சா.ஆ–1ல் நான் கிரையம் பெற்றது 67 செண்டு என்றும், பட்டா 60 செண்டுக்குதான் வழங்கப்பட்டுள்ளதற்கு நான் என்ன நடவடிக்கை எடுத்துள்ளேன் என்றால் நடவடிக்கை எடுத்தேன். சர்வேயரை வைத்து நடவடிக்கை எடுக்கும்போதுதான் பிரச்சணை ஏற்பட்டு இவ்வழக்கு போட்டுள்ளேன்.

6. மேற்படி சங்கதிகள் தான் இவ்வழக்கை தாக்கல் செய்வதற்கு வழக்கு மூலமாக வழக்குரையில் நான் கூறியுள்ளேனா என்றால் கூறியுள்ளேன். சர்வேயருக்கு நான் கட்டிய படிக்கான ரசீதினை இவ்வழக்கில் நான் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் கிரையம் பெற்ற சொத்திற்கு நான்கு பக்கத்தில் 1, 2 பிரதிவாதிகளுக்கு

சொத்து இல்லை என்றால் சரிதான். சாட்சி தற்போது மாற்றி 1–ம் பிரதிவாதி அனிதாவிற்கு பக்கத்தில் சொத்து உள்ளதாக தாமாக கூறுகிறார். 1–ம் பிரதிவாதியின் சொத்து வழக்கு சொத்தின் கிழக்குபக்கத்தில் அமைந்துள்ளது. 1–ம் பிரதிவாதியின் சொத்து அமைந்துள்ளதை வழக்குரையில் சொத்து விவரத்தில் கூறியுள்ளேனா என்றால் கூறியுள்ளேன். அவ்வாறு நான் குறிப்பிடவில்லை என்றும், வழக்கிற்காக பொய்யாக கூறிகிறேன் என்றும் சொன்னால் என்றால் இல்லை.

7. இவ்வழக்கில் காவல் நிலையத்தில் புகார் அளித்ததாக கூறியுள்ள நிலையில் அப்புகாரின் நகலை இவ்வழக்கில் நான் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. வா.சா.ஆ–2ல் என் மனைவி பெயரை சேர்ப்பதற்கு முன்பே 60 செண்டுக்குதான் என் பெயரில் பட்டா வழுங்கப்பட்டிருந்தது என்றால் சரிதான். வா.சா.ஆ–1ற்கு பிறகு என் பெயரில் உடனடியாக பட்டா மாற்றிவிட்டேனா என்றால் சரிதான். வா.சா.ஆ–1ன் படி முழு அளவிற்கு பட்டா வழங்காமல் குறைவான அளவிற்கு பட்டா வழங்கபட்டதை எதிர்த்து மாவட்ட ஆட்சியர், வட்டாச்சியர் மீது வழக்கு ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. குறைவான அளவிற்கு பட்டா வழங்கப்பட்டதற்கு வருவாய் கோட்டாட்சியரிடமோ, மாவட்டஆட்சியரிடமோ மனு அளித்திருந்தேனா என்றால் அளித்திருந்தேன். அந்த மனுவின் நகலை இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

8. நான் அளித்த மனுவில் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்ற விவரத்தை தெரிந்துக்கொண்டேனா என்றால் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. அவ்வாறு நடவடிக்கை எடுக்காததற்கு மேல் நடவடிக்கை ஏதேனும் எடுத்தேனா என்றால் இல்லை. சொத்தை நான் கிரையம் பெறுவதற்கு முன்பு அளந்து பார்த்தேனா என்றால் அளந்து காட்டினார்கள். அளக்கும்போது வழக்குச்சொத்தின் விஸ்தீரணமும் நாற்புற எல்லைகளும் எனக்கு தெரியும் என்றால் சரிதான். என்னை மிரட்டியோ, கட்டாயப்படுத்தியோ வற்புறுத்தியோ கிரையம் வாங்க சொன்னார்களா என்றால் 2–ம் பிரதிவாதி பழனியும், அவரது அப்பா கணபதியும் என்னை மிரட்டி அழுத்தம் கொடுத்தார்கள்.

9. அவ்வாறு என்னை மிரட்டி கிரையம் செய்துள்ளதற்கு அவர்களுக்கு

எதிராக அந்த கிரைய ஆவணம் செல்லாது என்றும், கிரைய தொகையை திரும்ப கேட்டும் வழக்கு தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. வா.சா.ஆ–1 நிறைவேற்றம் செய்வதில் எந்த வற்புறுத்துதலும் இல்லை, என்னுடைய சம்மதத்தின் பெயரில் தான் கிரையம் வாங்கியுள்ளேன் என்றால் இல்லை. வா.சா.ஆ–1ன் படி கிரையம் பெற்றப்பிறகு இதுநாள்வரை நான்தான் அனுபவம் செய்துவருகிறேன் என்றால் அனுபவம் செய்யவிடவில்லை என்பதால் 60 செண்டில்தான் அனுபவம் செய்கிறேன். எனது அனுபவத்தில் இல்லாத 7 செண்டையும் சேர்த்து வழக்குரை சொத்துவிவரத்தில் 67 செண்டில்தான் அனுபவித்து வருவதாக வழக்கில் கூறியுள்ளது தவறு என்றால் சரிதான்.

10. வழக்கு சொத்தின் மேற்கு பக்கத்தில் சுடுகாட்டிற்கு செல்லும் சாலை அமைந்துள்ளது என்றால் இல்லை. வழக்கு சொத்தின் மேற்கு பக்கத்தில் வழி என்று குறிப்பிட்டுள்ளது நடைபாதையை குறிக்கும்.

(பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் வேண்டுக்கோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது)

K VENKATESAN Digitally signed by K VENKATESAN Date: 2023.12.12 18:51:41 +0530

DISTRICT MUNSIF,

KATPADI